# அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் நிதியம் - 2010

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள், விளக்கங்கள் என்பவற்றிற்கமையவும் அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்களத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் நிதியம் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும் இவ்வறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்டவாறான விடயங்களின் மூலம் நிதிக்கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் திணைக்களத்தின் அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் நிதியத்தின் நிதி நிலைமை, அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாட்டு விளைவுகளது நிதிக்கூற்றுக்கள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தோற்றும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்.

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கை

1995 இன் 35 ஆம் இலக்க சட்டத்தின் 35(2) ஆம் பிரிவின் பிரகாரம் அறவீடு செய்யப்படுகின்ற ஒவ்வொரு கட்டணத்திலிருந்தும் 2/3 பங்கு அளவீட்டு அலகுகள் நியமங்கள் சேவைகள் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளில் அதன் மொத்த வருமானத்தில் 2/3 பங்கு நிதியத்திற்கு கணக்கீடு செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 104,683,392 தொகையான சீல் இடும் வருமானத்தில் 1/3 பெறுமதியான ரூபா 34,894,464 தொகையை அரச நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 35,397,261 தொகையை நிதியத்திற்கு செலவு வைத்தமையால் ரூபா 502,797 தொகை வித்தியாசமாக இருந்தது.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பற்றுச்சீட்டுக்களின் பிரகாரம் கணக்கிடப்பட்ட மீளாய்வாண்டிற்கான முத்திரைபதித்தல் கட்டண வருமானம் ரூபா 104,893,461 ஆன போதும், கணக்குகளில் அவ்வருமானம் ரூபா 104,683,392 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 210,069 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கணக்காய்வின் போது கிடைத்த உறுதிப்படுத்தலின் பிரகாரம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர்க்கப்பட்ட வரி ரூபா 12,587,211 மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி ரூபா 3,146,802 ஆக இருந்த போதும், இறுதி நிதிக்கூற்றுக்களில் அவ்வரி முறையே ரூபா 12,745,630 மற்றும் ரூபா 3,186,407 ஆக காண்பிக்கப்பட்டமையால் ரூபா 158,419 மற்றும் ரூபா 39,605 தொகை வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் நானாவித கட்டண வருமானம் ரூபா 115,252,155 தொகை ஆன போதும், கணக்காய்வின் போது மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் கிடைத்த அக்கட்டண வருமானம் ரூபா 105,893,461 ஆன காரணத்தால் வருமானத்தில் ரூபா 9,358,694 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை.

பின்வரும் கணக்கு விடயங்கள் ஒவ்வொன்றின் முன்னே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | | சமர்ப்பிக்கப்படாத எழுத்துமூலச் சான்று |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| (அ) | ஆதனங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 106,629,763 | (i) | நிலையான சொத்துப் பதிவேடு |
| | | | (ii) | விரிவான பட்டோலை |
| | | | (iii) | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சொத்துக்கள் தொடர்பான மெய்மையாய்வு அறிக்கை |

காணப்பட்டது.

**(ஈ) அரச நிதிச்சுற்றறிக்கை**

| | | |
|---|---|---|
| (i) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீ/எப்/423 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04:2 (ஆ) பிரிவு | நிதியத்திற்குக் கிடைக்கப்பெறும் அனைத்து பெறுவனவுகளுக்காக பற்றுச்சீட்டு வழங்கல் இடம்பெற்றிருக்கவில்லை. |
| (ii) | 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதிய பீ/எப்/437 ஆம் இலக்கம் | நிறுவனத்திற்குரிய வாகனங்கள் மற்றும் கட்டிடங்கள் என்பவற்றிற்காக உரிய காப்புறுதி மேவுகைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி மீளாய்வு

#### 2.1.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்குரிய நிதியத்தின் செயற்பாடுகளிலிருந்தான விளைவுகள் ரூபா 70,255,700 மிகையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை 69,333,395 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவுகளில் ரூபா 922,305 ஆன அதிகரிப்பொன்று ஏற்படுவதற்கு முத்திரை பதித்தல் கட்டண வருமானம் ரூபா 15,275,161 ஆல் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தது.

### 2.2 செயற்பாட்டு மீளாய்வு

#### 2.2.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

2009 திசெம்பர் 09 ஆம் திகதி வழங்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் புதிய ஆய்வுகூடமொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 575,122 தொகை செலவில் 2009 திசெம்பர் 21 ஆம் திகதி அடிக்கல் நடப்பட்டிருந்ததுடன், 2009 ஆம் ஆண்டில் ரூபா 48,079,314 தொகை பொறியியல்சார் செயற்பாடுகள்